**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கும்மிடிப்பூண்டி**
**<u>முன்னிலை திரு. R. செந்தில் குமார், M.A., B.L.,</u>**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கும்மிடிப்பூண்டி**
**2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 01ம் தேதி திங்கட்க்கிழமை**
**<u>குற்ற பல்வகை மனு எண். 302/2026</u>**

முகேஷ் குமார், வ/23, த/பெ. ஆனந்தன்

..........மனுதாரர் /எதிரி

**/எதிராக/**

தமிழ்நாடு அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
கும்மிடிபூண்டி காவல் நிலையம்,
குற்ற எண்.89/2026

......எதிர் மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்

இந்த மனுவானது 22.05.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.டி. ஐசக் சாமுவேல், திரு.ஆர். இளவரசன், திரு.ஆர். சிலம்பரசன் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆஜராகியும் இருதரப்பிலும் கேட்டறிந்து 01.06.2026 அன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/ எதிரிக்கு பிணை வழங்ககோரி BNSS பிரிவு 480 ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.மனுதாரர்/ எதிரி மீது கும்மிடிப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.89/2026 ல் சட்ட பிரிவுகள் 132, 296(b), 351(3) of BNS r/w 7(1)(a) CLA Actன் கீழ் வழக்கு பதிவுசெய்யப்பட்டு மனுதாரரான எதிரி கடந்த 21.05.2026ம் தேதியிலிருந்து இன்று வரை 11 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/எதிரி புலன் விசாரணையில் குறுக்கிடமாட்டார் எனவும், இவ்வழக்கில் மனுதாரருக்கு தக்க பிணையதாரர்கள் உள்ளார்கள் எனவும், நீதிமன்றம் விதிக்கும் எந்த நிபந்தனைக்கும் மனுதாரர் கட்டுப்படுவார் எனவும், ஆகவே, மனுதாரரை பிணையில் விடுவிக்கும்படி கூறப்பட்டது.

3. அரசு தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையில், கடந்த 21.05.2026ம் தேதி காவல் ரோந்து பணியில் ஈடுபட்டபோது பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக நின்று

கொண்டு கெட்ட அறுவெறுக்கத்தக்க அசிங்கமான ஆபாச வார்த்தைகளில் சத்தமாக பேசி கொண்டும் பலமுறை எச்சரித்தும் மிரட்டும் தோனியில் அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் கட்டையை காட்டி அடித்து கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரியிடமிருந்து சுமார் 1/2 அடி உருட்டுக்கட்டையை கைப்பற்றப்பட்டதாகவும், மேலும் எதிரிக்கு பிணை வழங்கினால் இதே போன்று குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரியை பிணையில்விட கடுமையான ஆட்சேபனை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

**தீர்வு**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது கும்மிடிபூண்டி காவல் நிலைய குற்ற எண்.89/2026 ல் சட்ட பிரிவுகள் 132, 296(b), 351(3) of BNS r/w 7(1)(a) CLA Actன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கடந்த 21.05.2026ம் தேதியிலிருந்து இன்று வரை 11 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மேலும் எதிரி மீது முன் வழக்கு நிலுவையில் இருப்பினும், எதிரியின் சிறை காலத்தை கணக்கில் கொண்டு எதிரியை கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் பிணையில் விடுவிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**நிபந்தனைகள்**

1. மனுதாரர் / எதிரி தனக்காக இரு ஜாமீன்தாரர்களுடன் தலா ரூ.10,000/–க்கு பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2. மனுதாரர் கும்மிடிப்பூண்டி காவல் நிலையம் ஆஜராகி வேலை நாட்களில் காலை 10.30 மணிக்கு 15 நாட்களுக்கு கையொப்பம் போடவேண்டும்.

3. மனுதாரர் / எதிரி பிணையில் வெளிவந்த பின்பு குற்றச்செயலில் ஈடுபடக்கூடாது என்றும், புலனாய்வுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும், சாட்சியையோ புகார்தாரரையோ மிரட்டக் கூடாது என்றும், சாட்சிகளை கலைக்கக்கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,**

இந்த **பிணை மனு அனுமதிக்கப்பட்டு,** மனுதாரர் / எதிரியை மேற்கண்ட நிபந்தனைகளின் பேரில் பிணையில் விட அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 01.06.2026ம் தேதி திங்கட்க்கிழமை இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R.Senthil Kumar

Digitally signed by R.Senthil Kumar
Date: 2026.06.01 16:48:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்மிடிப்பூண்டி.